# தமிழ் நாடு அரசு

## நெடுஞ்சாலைத் துறை

## கோயமுத்தூர் வட்டம்

*ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண். 1 / 2006 – 2007 / தவஅ /நாள் 29.5.2006*

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் ஆளுநர் அவர்களின் சார்பாகவும் கோயமுத்தூர் நெடுஞ்சாலைத்துறை, கண்காணிப்புப் பொறியாளர் அவர்களால் இத்துறையில் முதல் வகுப்பில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழ்க்கண்ட பணிகளுக்கு மூடி முத்திரையிட்ட சதவீத ஒப்பந்தப்புள்ளிகள் **21.6.2006** அன்று பிற்பகல் 3.00 மணி வரை (அலுவலகக் கடிகாரப்படி) கோயமுத்தூர் நெடுஞ்சாலை வளாகத்தில் கதவு எண். 1653ல் அமைந்துள்ள கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் **21.6.2006** அன்று பிற்பகல் 3.15 மணிக்கு கண்காணிப்புப் பொறியாளர் அவர்களால் வருகை தந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் மற்றும் அவர்தம் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

| வ எ ண | வேலையின் பெயர் | உத்தேச மதிப்பீட்டு தொகை (ரூபாய்) | முன் வைப்புத் தொகை (ரூபாய்) | பணி செயலாக்க கால வரம்பு | ஒப்பந்த படிவம் கிடைக்கும் இடம் |
|---|---|---|---|---|---|
| *பகுதி 2 திட்டம் 2005 – 2006* | | | | | |
| *கோவை (நெ) கோட்டம்* | | | | | |
| *நான்காம் அழைப்பு* | | | | | |
| *திருப்பூர் (நெ) உட்கோட்டம்* | | | | | |
| 1 | திருப்பூர் – படியூர் சாலை கி.மீ. 2/6ல் பாலம் திரும்பக் கட்டுதல் | 81.00 | 51,000 | 9 மாதங்கள் | கோட்டப் பொறியாளர் (நெ) கோவை |

ஒப்பந்தப்புள்ளி நமூனாக்கள், நிபந்தனைகள், வரைபடங்கள் முதலியன கோவை (நெ) கோட்டப் பொறியாளர் அலுவலகத்தில் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் குறிப்பிட்ட தொகையை கோட்டத்தின் மாவட்ட எல்லையில் உள்ள கருவூலகத்தில் செலுத்தி அதற்கான செல்லுச்சீட்டு அல்லது ஷெட்யூல்டு வங்கியிலிருந்து கோவை கோட்டப் பொறியாளர் (நெ) அவர்களின் பதவியின் பெயரில் கீழ்க்கண்ட தொகைக்கு அதாவது ஒப்பந்தப்புள்ளி நமூனா விலை, விற்பனை வரி மற்றும் சர்சார்ஜ் சேர்த்து பெறப்பட்ட கேட்பு வரைவுடன் (Demand Draft) **16.6.2006** வரை எல்லா வேலை நாட்களிலும் அலுவலக நேரத்திற்குள் எழுத்து மூலம் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

_நமூனா விலை_ | _கணக்குத் தலைப்பு_

ரூ. 5,000/— **8658 Highways Suspense III O.R to the Credit of Divisional Engineers (H) Coimbatore**

_விற்பனை வரி மற்றும் சர்சார்ஜ்_
ரூ.630/— **0040 Sales Tax**

ஒப்பந்தப்புள்ளி நமூனாக்கள் கோட்டப் பொறியாளர் (நெ) கோவை அலுவலகத்தில் உரிய கட்டணத்துடன் அஞ்சலக செலவு தொகையும சேர்த்து செலுத்திய ஆவணங்களுடன் வேண்டுகோள் விடுவிக்கும் ஒப்பந்தகாரர்களுக்கு அவர்களுடைய முழு பொறுப்பில் அஞ்சல் அல்லது தனியார் விரைவு அஞ்சல் **(COURIER)** மூலம் அனுப்பப்படும். இது தொடர்பாக காலதாமதத்திற்கு இத்துறை பொறுப்பேற்காது.

ஒப்பந்தக்காரர்கள் தங்களின் ஒப்பந்தப்புள்ளிகளை நேரிலோ (அ) தனியார் விரைவு அஞ்சல் மூலமாகவோ (அ) அஞ்சல் துறை விரைவு அஞ்சல் (அ) பதிவுத் தபாலிலோ (அ) சாதாரண தபாலிலோ கூடுதலாக ஒரு மூடி முத்திரையிட்ட உறையில் வைத்து விலாசமிட்டு ஒப்பந்தப்புள்ளி கோரும் அலுவலரின் கைகளில் **21.6.2006** அன்று பிற்பகல் 3.00 மணிக்குள் பெறத்தக்க வகையில் அனுப்ப அனுமதிக்கப்படுகிறார்கள். மேற்காணும் முறையில் அனுப்பப்படும் ஒப்பந்தப் — புள்ளிகள் **21.6.2006** பிற்பகல் 3.00 மணிக்கு மேல் பெறப்பட்டால் அவை திறக்கப்படாமல் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமே திரும்ப வழங்கப்படும். தனியார் விரைவு அஞ்சல், அஞ்சல் துறை மற்றும் தனி நபர் மூலம் ஏற்படும் காலதாமதத்திற்கு இத்துறை பொறுப்பேற்காது.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ) கோயமுத்தூர் அவர்களுக்கு எந்த ஒரு ஒப்பந்தப்புள்ளியையும் அல்லது எல்லா ஒப்பந்தப்புள்ளிகளையும் எவ்வித காரணமும் கூறாமல் நிராகரிக்க முழு அதிகாரம் உண்டு.

ஒப்பந்தக்காரர்கள் இரண்டு ஆண்டுகள் ஒப்பந்தப்புள்ளிகளில் கலந்து கொள்ளாமலோ அல்லது மூன்று முறை ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் பெற்று ஒப்பந்த அழைப்புகளில் கலந்து கொள்ளாமல் வீட்டாலோ அவர்களின் பதிவு இரத்தாகும்.

கண்காணிப்புப் பொறியாளர் (நெ),
கோவை—18.

---

/உண்மை நகல்/

கண்காணிப்புப் பொறியாளருக்காக,
(நெ), கோவை—18.